**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MARAVARPERUNGUDI LIME KANKAR QUARRY LEASE – III FOR QUARRYING OF LIME KANKAR & CLAY (BLACK COTTON SOIL) OVER AN EXTENT OF 158.865 HA FOR PRODUCTION OF 28,00,000 TONNES LIME KANKAR (ROM) @ MAXIMUM 1.00 MTPA & 20,00,000 TONNES CLAY (BC SOIL) @ MAXIMUM 1.00 MTPA – UPTO 3.0M BGL – DURING PLAN PERIOD AT S.F.NO. PARTS OF 100, 101, 103, 109, 119 TO 132, 137 TO 141, 404, 407 TO 413, 415 TO 416, 418, 429, 431 TO 435, 437 TO 440 & 442 TO 457 OF MARAVARPERUNGUDI AND PARTS OF 468, 538 TO 544, 683 & 684 OF T.KOPPUCHITHAMPATTI VILLAGES IN ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT, TAMILNADU BY M/S.THE RAMCO CEMENTS LIMITED, VIRUDHUNAGAR DISTRICT ON 08.08.2025, 11.00 A.M AT M/S.SATHYA MAHAL, 1/117A, ARUPPUKOTTAI – SAYALGUDI MAIN ROAD, M.REDDIAPATTI, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.R.Rajendiran | : | District Revenue Officer,<br>Virudhunagar District. |
| 2 | Er. J. Hamoneth Joesun | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | Thiru.S.Senthivel | : | Tahsildar,<br>Aruppukkottai,<br>Virudhunagar District. |
| 4 | Er.R.Chithradevi | | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 5 | Er. V.Kalaijothi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| | As per Attendance Register | : | Government Officials, Public and Project proponent 218 Nos<br>(List enclosed). |

1. **Mr.Pothiraj, Krishnapuram Village**

Mr. Pothiraj stated that he is a resident of the Krishnapuram area. Although this area is a small village its total land area is about 1800 acres. Out of this, he personally owns 40 acres. In the past, due to difficulties in meeting his sister's wedding expenses through farming, he decided to sell his land. At that time, hence land brokers offered only Rs. 2,000 per acre. However, as the Ramco Group offered Rs. 4,000 per acre, he sold the land to the Ramco Group. He said that, for the past 30 years, no stone extraction activities have been carried out on those 40 acres. Until about 10 years ago, Mr. Pothiraj himself cultivated the land. Currently, the land has been leased to a family at Rs. 2,000 per acre. The Ramco Group has not raised any objections so far. This company has been providing many benefits. They participate in village events and have not imposed any restrictions on using specific routes. In limestone extraction, no explosives are used; only vehicles such as JCBs and Hitachi are used. As per Environmental Regulations, machinery is to be operated only at a distance of 1 km from the village, but they operate from 2–3 km away. Furthermore, in villages where the Ramco Group has purchased land, they have provided financial assistance for temple construction and for constructing individual toilets. He said that, during the COVID-19 period, they distributed groceries to many people. Since cement production takes place locally, transportation costs are reduced, allowing local people to purchase it at a lower price. This company has acted in a humanitarian manner, providing employment, Educational facilities and particularly providing Notebooks to students.

2. **Mr.Kannan, Nilaiyur Kambikudi Village**

He said that, about his native place Mandri Oadai village, located in Kambikudi Panchayat, Kariyapatti Union. That area once had about 19–20 irrigation tanks, but a few years ago, it had become barren land and four years ago on behalf of the farmers in the area he took the initiative to bring surplus water from the Vaigai River into the tanks. When the canal restoration work began, a breach occurred due to narrow width and high water flow. Some companies provided financial assistance. Later, M/s.The Ramco Company directly supplied 600 bags cement at free of cost, and also provided the required cement at 50% of the market price. Furthermore, with that help, the damaged lake was restored three years ago, and we utilized the water that would otherwise have flowed into the sea. As a result, the drinking water shortage in areas such as Aviyur, Arasakkulam, Purandi, and Mangulam villages was resolved. The situation where people abandoned agriculture and migrated elsewhere for work was also prevented. Now, the Government has taken up the project and allocated funds. Last week, the District Revenue Inspector conducted an inspection and confirmed the establishment of a new canal system. He requested that this company, which has been supporting farmers, extend its assistance to more such projects. He concluded his speech by thanking for the opportunity and given that photographic evidence also.

He expressed gratitude for the continuous support extended by M/s.Ramco Company in Environmental-related works. As an example of Aalamaram's contributions to Environmental protection, he cited the inauguration of an Environmental Park establishment on 70 acres at Pandulgudi irrigation by the Hon'ble Chief Minister. He also appreciated the M/s.Ramco Company for collaborating in the "Pollution-Free Rajapalayam" project and working successfully. He stated that along with industrial growth, large companies like Ramco should continue to support Environment-related organizations such as Aalamaram. Finally, he concluded his speech with a request to provide 2,000 saplings with protective fencing every year to the Aalamaram Organization.

**6.Former President of Pandulgudi Town Panchayat**

The former chairman of Pandulgudi stated that he had previously served as a District Councillor and, before that, as the chairman of Pandulgudi for five years. He said that the Ramco company began operations in his village 60 years ago. At that time, the population of Pandulgudi was only about 2,000 people. Today, it has grown to more than 7,000 households. There has been significant industrial progress, especially with ample job opportunities provided to local people. As a result, residents did not have to move elsewhere, and people from other places even migrated here. Thus, Ramco's contribution to the village's development has been substantial. He stated that it is impossible to listout everything M/s.Ramco has done in the last 60 years, so he highlighted only some major services from the past five years for example, when a request was made to desilt a 100 kanmois then District collector granted permission for same M/s.The Ramco company has provided the bund at a cost of ₹28 lakhs. Similarly, through the Water Supply Board, pipelines were laid in several villages to provide drinking water facility. Every year, they distribute 100 to 120 saplings aslo.

Furthermore, for Environmental protection in Pandulgudi, a park was established and walking paths were constructed. In a village named Mettupatti, which had no Government land, land worth Rupees 18 lakhs has been constructed and toilets have been established there. Through such services, the company continues to support the local people. He mentioned that, all the local body representatives present their requirements to the company and strive for the village's development. Since the M/s.The Ramco has been functioning well for many years, he requested the District Collector to grant permissions to the company.

**7.Mr.G. Balamurugan, Maravarperungudi Village**

He stated that, the Ramco company has been quarrying stones in their area for the past 20–25 years, and during that time, it has implemented many good initiatives such as providing drinking water facilities and helping for school students. He also stated that the company continues to fulfill many requests from the public as possible. He stated that, company during the Aadi Pongal season, when the village road had been damaged. M/s.The Ramco company repaired it completely within two days. Serving as the Physical Education Teacher head for 15 years in the primary school, he said that Ramco had consistently supported his initiatives, and that this assistance had continued for the past 18 years. In conclusion, he stated that they have no objection to Ramco operating the kankar quarry in their area and

teacher but also as a farmer owning 160 acres of land, he pointed out the increasing challenges of agriculture in the present times. He noted with pride that the company, which converts barren land into productive use, ranks second in South India and fifth in India in its field. He praised the company's CSR activities such as improving of schools, raising the quality of Education, and providing purified drinking water facilities including 1,500-litre capacity of RO plants to higher secondary schools. He also commended land maintenance work, improvement of school premises, renovation of the old post office building, and initiating renovation works worth Rupees 8 lakh through CSR funds. He stated that having an industry in the village brings only benefits, not harm. He also, state that, agriculture is declining due to public disinterest in agriculture and change in nature unpredictalse of weather. When a farmer calculates his earnings, often the returns do not even cover the costs. Therefore, both as a teacher and as a farmer, he expressed no objection to giving permission for the establishment of the factory. He concluded by extending his best wishes for the company to rise from its current 5th place to 1st place in the country and expressing his gratitude for the opportunity to speak, and ending with thanks.

**10.Mr.Satheesh, Environmental Activist**

He expressed that he respects the local people's thoughts of preserving their customs, culture, and traditions, and acknowledged as a fellow citizen the genuine issues they had raised. According to him, the Government should respect the rights of the people and take steps to ensure sustainable development. In particular, he emphasized that new job opportunities should given immediately, permanent housing should be provided to the affected peoples and efforts should be made to maintain greenery and Ecological balance. He stated that more trees should be planted and that development should proceed without causing Environmental pollution and highlighting the need for Environmental protection and sustainable progress. He concluded his speech by stating that both senior Government officials and the public should support thes proposed quarry.

**11.Mrs.Murugalakshmi, Headmistress at Maravarperungudi School**

She said she was pleased to learn from other's speeches that Ramco Company, along with its own growth, is also contributing to the livelihood improvement of the surrounding villages. She mentioned that during the rainy season, when rainwater accumulated in the school premises making it difficult for students to move around, the company promptly acted upon the school administration's request by laying gravel and leveling the ground with a JCB to solve the waterlogging problem. Furthermore, she stated that the company has been consistently supporting the school by providing notebooks, slates, prizes during annual day celebrations, repairing the school compound wall, and conducting eye check-up camps and general medical camps both in the school and the village to offer medical assistance. On behalf of the school, she expressed her gratitude and best wishes for the continued growth of the company's social service activities.

of the villagers, he requested the Government to grant permission to Ramco company to quarry limestone.

**15.Mr.Inbasekaran, Arakkonam**

He spoke on "Small Works for Livelihood Improvement – This is the nature of M/s.Ramco Company. He mentioned that Ramco Cement Company is the second-largest company in India, that limestone is a very rare resource, and that it is a matter of pride for this company to handle it. He appealed to the Government to issue an unobstructed clearance certificate immediately to Ramco company, which has been providing essential basic amenities to public including toilets, financial help to temples and Employment opportunities.

**16.Mr.Anandkumar, Koppuchithampatti Village**

He stated that, through the rural development scheme, 67 toilets had been constructed during last year's rainy season, when water stagnated in the village, more than ten workers immediately and helped from M/s.Ramco Company to them. He further mentioned that in the current quarry operations, even though stones are extracted only up to 3 m, the water level ranges from 10–15 m; however, at present, the amount of good-quality water in the village has drastically reduced, and the salinity has increased. Hence, he requested that measures be taken to improve the water level. In addition, although people from many villages work in the company, there are very few employees from Koppuchithampatti. Therefore, he urged the company to take responsibility for providing job opportunities to Educated youth from the village.

**17.Mr.Govindaraj, Sivalarpatti Village**

Mr.Govindaraj, a resident of Sivalarpatti in Vilathikulam Taluk, said that the Ramco company has been providing various assistance to the four villages under the Sivalarpatti Panchayat — Sivalarpatti, Kambathupatti, Melapatti, and Suppulapuram. Recently, the company Provided the cement Drying Yard they had requested, and also provided all the necessary items for the consecration ceremonies (Kumbabishekam) of temples in all four villages. Additionally, by completely desilting and cleaning the village pond, a place that previously did not get water even with heavy rainfall now receives water even with light rains. He stated that M/s.Ramco company, by continuing such assistance, has been working together like a family enterprise for the welfare of the villages and has been bringing significant benefits to them. He very humbly requested that all necessary approvals be granted for the projects undertaken by this company.

**18.Mr.Raja, Dharmapuri District**

He is from Dharmapuri, works in the public service NGO "Bharathiyar Nagariga Sevai Sangam." He expressed his gratitude to the District Environmental Engineer (Virudhunagar), the District Revenue Officer, and the District Collector for the opportunity to speak at this event. He stated

the six social groups in the village, he stated that land can be made available from the village and requested the company's assistance in constructing the hall. Similarly, he requested the installation of a deep bore well for the public cemetery to ensure adequate water supply. Finally, he emphasized that the company's quarrying activities should be carried out in a way that does not cause any harm to the village.

22. **Mr. Rajapandiyan – North Koppuchithampatti Village.**

He is from North Koppuchithampatti village, extended his greetings and thanks to Government officials as well as M/s. Ramco Company. He expressed pride that his village is the focus of this project. According to him, Ramco has provided several basic facilities in the village. Many initiatives, such as drinking water supply and additional toilet construction, have been effectively implemented. Currently, most of houses have toilets, and drinking water facilities have been provided. However, he noted that in some areas, drinking water is still required, and the company has acknowledged and accepted this request. During heavy rainfall last year, immediate actions were taken, saving several houses from damages. He also mentioned that employment opportunities are increasing and requested that these should be expanded further. He noted that the company had fulfilled the request made in the previous public hearing meeting regarding a hospital and emphasized that such welfare initiatives should continue. Finally, he expressed his support for the kankar extraction in their village.

23. **Mrs.Subbuthai – North Koppuchithampatti Village.**

He stated that M/s. Ramco Company has provided various toilet facilities may help in their village, creating many amenities for women. These facilities are being used effectively by everyone in an Environmentally safe and pollution-free manner. However, due to limited drinking water supply, he requested the installation of a Sintex tank in their street.

24. **Mr. Muthu Raja – (Location not specified)**

He quoting the great poet Bharathi, "We shall serve both agriculture and industry," he emphasized that these two sectors play a crucial role in a nation's development. He noted that it is encouraging to see industrial progress in a developing country like India, while also highlighting the need for some small improvements. He mentioned that M/s. Ramco Cement has provided many social welfare contributions and he, as a social activist, has previously attended many public hearing meetings to observe these efforts. As a request, he asked the company to increase tree planting, particularly through forest creation projects. At present, in Ramanathapuram district, most trees are (Prosopis juliflora); other types of trees are very few. Therefore, he suggested that company to carry seeds or other useful saplings during travel time and plant them along the roadsides. He noted that planting one or two seeds per month could result in at least 12 trees by the end of the year. Additionally, he requested that local youth be given priority in Employment so they can contribute to the development of their own village.

meet the public needs without upsetting them and maintain a good reputation. He expressed gratitude to Ramco Company and the Central Government for utilizing CSR funds for welfare activities.

**27.Mr. Chandrasekaran – Koppuchithampatti**

He is from Koppuchithampatti, shared his experience as a common farmer during the public hearing meeting. He stated that while most discussions are dominated by charitable organizations, he could directly explain the difficulties faced by residents living near the quarry. He explained that quarry operations have been ongoing for many years, and the land purchased for farming has trees along the fences, which are being damaged by pigs. Therefore, he requested that all the existing karuvelam (Prosopis) trees be removed and replaced with useful trees such as neem and tamarind trees, to provide long-term benefits.

**28. Mr. Aasirvadham Muthumari .**

Aasirvadham Muthumari shared that his household had been without toilet facilities for 10 years. He expressed that the recent provision of a toilet by M/s. Ramco Cement has been extremely helpful. Furthermore, he mentioned that there are very few Employment opportunities for women in their village, leaving many without work. He thanked M/s. Ramco Cement and requested that the company continue to support them and provide job opportunities.

**29. Mr. Sunandha Reddy, Environmental Activist.**

Sumandha Reddy, a 69-year-old Environmental activist, described himself in his speech as "the first Indian Environmentalist who supported industrial development." He praised the M/s. Ramco Cement management, noting that they provide Employment to people across union territories and more than 15 smaller states. Considering this, he expressed his support for granting permission to M/s. Ramco Cements lime kankar quarry.

**30.Mr.Balaji, Koppuchithampatti Village**

Balaji, from Koppuchithampatti village, mentioned that earlier a public hearing meeting was held at the same marriage hall regarding approval for kankar extraction in T. Koppuchithampatti village. At that meeting, the company came forward to provide all necessary services, committing services worth at least Rs. 10–20 lakh. Further, stated that within a year of the permission being granted, the company constructed and provided about 67 toilets in the village. Priority was given to households without toilet facilities, especially for women. Before this meeting, K. K. Raja from his village had requested the installation of water purification plants for four streets and he is expressed his full support for that request.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், மறவர்பெருங்குடி கிராம புல எண்கள்.100, 101, 103, 109, 119 to 132, 137 to 141, 404, 407 to 413, 415 to 416, 418, 429, 431 to 435, 437 to 440 & 442 to 457 பகுதிகள் மற்றும் T.கொப்புச்சித்தம்பட்டி கிராம புல எண்கள்.468, 538 to 544, 683 & 684 பகுதிகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட், மறவர்பெருங்குடி சுண்ணாம்பு சரளை குவாரி குத்தகை - III 158.865 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் சுண்ணாம்பு சரளை & களிமண் (கரிசல் மண்) அகழ்விப்பு திட்டகாலத்தில் சுண்ணாம்பு சரளை உற்பத்தி 28,00,000 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் மற்றும் களிமண் (கரிசல் மண்) உற்பத்தி 20,00,000 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள்-மொத்த ஆழம் 3.0 மீ இத்திட்டம் குறித்த பொதுமக்கள் கருத்து கேட்பு தொடர்பாக 08.08.2025 முற்பகல் 11.00 மணியளவில் தி/ள்.சத்யா மஹால், 1/117A, அருப்புக்கோட்டை - சாய்ல்குடி மெயின்ரோடு, M.ரெட்டியபட்டி, அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.R.ராஜேந்திரன் | : | மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி. ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் மாவட்டம். |
| 3 | திரு.S.செந்திவேல் | : | வட்டாட்சியர், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். |
| 4 | பொறி.இரா.சித்ராதேவி | | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் மாவட்டம். |
| 5 | பொறி.பே.சுலைஜோதி | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் மாவட்டம். |
| | வருகை பதிவேட்டின் படி | : | அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 218 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது). |

பிறகு, மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் மாவட்டம் அவர்கள், பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன் பின் தி/எ். தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. **திரு.போத்திராஜ், கிருஷ்ணாபுரம் கிராமம்:**

திரு.போத்திராஜ் அவர்கள், கிருஷ்ணாபுரம், இப்பகுதி சிறிய ஊராக இருந்தாலும், மொத்த நிலப்பரப்பு சுமார் 1800 ஏக்கர் என்றும், அதில் அவருக்கு சொந்தமாக 40 ஏக்கர் நிலம் உள்ளது எனவும், கடந்த காலத்தில், தங்கையின் திருமணச் செலவுகளை விவசாயம் மூலம் ஏற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டதால், நிலத்தை விற்க தீர்மானித்தார்கள் ஆனால், அந்த காலத்தில், ஏக்கருக்கு ரூ. 2,000 மட்டுமே வழங்க முன்வந்தனர், அச்சமயம் தி/எ். ராம்கோ குழுமம் எக்கருக்கு ரூ.4,000 வழங்கியதால், அவர் நிலத்தை தி/எ். ராம்கோ நிறுவனத்திற்கே கொடுத்தார். மேலும், கடந்த 30 ஆண்டுகளாக, அந்த 40 ஏக்கர் நிலத்தில் கல் எடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் வரை, அந்த நிலத்தை போத்திராஜ் அவர்கள் தாமே விவசாயம் செய்துவந்தார். தற்போது, அந்த நிலம் ஒரு குடும்பத்தாருக்கு ஏக்கருக்கு ரூ. 2,000-க்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், தி/எ். ராம்கோ நிறுவனத்தால் இதுவரை எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்றும் கூறினார். மேலும், நிறுவனம் பல சலுகைகளை வழங்கி வருகிறது. ஊர் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும், குறிப்பிட்ட வழித்தடங்கள் பயன்படுத்த எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. கல் மற்றும் சுண்ணாம்பு கல் எடுப்பதிலும் வெடி பொருட்கள் பயன்ப்டுத்தப்படவில்லை JCB ஹிட்டாச்சி போன்ற வாகனங்கள் மட்டுமே பயன்படுகின்றன. சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்கு ஏற்ப 1 கி.மீ. தூரத்தில் மட்டுமே இயந்திரங்கள் இயங்க வேண்டும் என்றாலும், அவர்கள் 2-3 கி.மீ. தூரத்தில்தான் சுரங்கங்களை அமைத்துள்ளனர் என்றும் கூறினார்.

மேலும், தி/எ்.ராம்கோ நிறுவனமானது நிலம் வாங்கிய ஊர்களில் கோயில் கட்டுதலுக்கும், தனிக் கழிப்பறை அமைப்பதற்கும் நிதியுதவி வழங்கி வருகிறது. கொரோனா காலத்தில் பலருக்கும் உணவுப்பொருட்களை வழங்கியுள்ளது என்றும், சிமெண்ட் தயாரிப்பும் உள்ளூரிலே நடைபெறுவதால், போக்குவரத்து செலவும் குறைந்து மக்களுக்கு குறைந்த விலையில் சிமெண்ட் கிடைக்கின்றது எனவும், மேலும் இந்த நிறுவனம் மனிதாபிமான முறையில் செயல்பட்டு, வேலைவாய்ப்பு, கல்வி உதவி, குறிப்பாக மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல் போன்ற பல நன்மைகள் செய்து வருகிறது எனக் கூறினார்.

அழகர்சாமி செய்தார்" என்று குறிப்பிட்டார். மேலும், இந்தப் பணியில் பலர் உதவி செய்தாலும், ராம்கோ குழுமத்தின் பங்களிப்பு மறக்க முடியாதது என அவர் தெரிவித்தார். வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத உதவியாக இதை கருதி, தி/ள்.ராம்கோ நிறுவனத்திற்கும் P.R.O (பொது தொடர்பு அலுவலர்) அவர்களுக்கும், நிர்வாகத்திற்கும் தெரிவித்து, மேலும், பிற நிறுவனங்களும் தங்களது பகுதிகளில் இதுபோன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்.

**4.திரு.S.K.சுப்புராஜ் - பூங்கமரத்துப்பட்டி கிராமம்**

திரு.S.K.சுப்புராஜ் அவர்கள், தனது உரையில், தாம் மற்றும் தம் சுற்றத்தினர் சேர்ந்து 100 ஏக்கர் நிலத்தை தி/ள். ராம்கோ நிறுவனத்துக்காக ஒப்படைத்ததாக கூறினார். மேலும், இந்த நிறுவனத்திற்காக மக்கள் பகுதிகளாக நிலம் வழங்கியுள்ளனர். அரசின் அனுமதி பெற்று, நிலத்தில் உள்ள கற்களை தோண்டி, பின்னர் நிலத்தை சமப்படுத்தி, அதில் மரங்கள் மற்றும் செடிகள் வளர்க்கப்பட்டுள்ளன. இதனால் மக்களுக்கு எந்த சிரமமும் இல்லாமல், மாசுக்கட்டுப்பாட்டுடன் சிறப்பாக நடைபெறுகிறது என்றும், குடிநீர் தொட்டிகள், பம்புகள், கான்கிரீட் சாலைகள் போன்ற வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இதற்கு முன் அரசு அனுமதி அளித்து கல் எடுத்தப்போதும் இந்த நிறுவனத்தால் எந்த வித பாதிப்பும் பொதுமக்களுக்கோ சுற்றுச்சூழலுக்கோ இல்லை என்றும், இதனால், சமூக நலப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளும் ராம்கோ குழுமத்திற்கு, புதிய குவாரிகளுக்கான அனுமதியை வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மேலும், அதேபோல், கிராமத்திலிருந்து வயலுக்கு செல்லும் சாலைகள் மழைக்காலத்தில் சேதாரமடைவதால், அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது என்றும், இதனை சீரமைத்து கொடுத்த தி/ள்.ராம்கோ நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்து தனது உரையை முடித்துக்கொண்டார்.

5.**திரு.புஷ்பராஜ் - ஆலமரம் அமைப்பின் பிரதிநிதி விருதுநகர்**

திரு.புஷ்பராஜ் அவர்கள், விருதுநகரைச் சேர்ந்த ஆலமரம் அமைப்பின் பிரதிநிதி புஷ்பராஜ் அவர்கள், தமது அமைப்பின் பணிகளை அறிமுகப்படுத்தினார். ஆலமரம் அமைப்பு கடந்த 5-6 ஆண்டுகளாக வாரந்தோறும் மரக்கன்றுகள் நடுதல், இரத்த தானம், உடல் உறுப்பு தானம் போன்ற மக்கள் நலச் சேவைகளைச் செய்து வருகிறது என்றும், இந்தப் பகுதியில் உள்ள மண்டபசாலை அய்யனார் திருக்கோயில் வளாகத்தில், 200 மரக்கன்றுகளை விருதுநகரிலிருந்து கொண்டு வந்து நட்டுள்ளனர். அந்த முயற்சியில், மரக்கன்றுகள் மற்றும் துளை எடுக்கும் கருவிகளை தி/ள்.ராம்கோ நிறுவனம் தொடர்ந்து வழங்கி வந்ததாக அவர் குறிப்பிட்டார். இதற்கு மேலாக, சூரனூர் அருகாமையில் உள்ள பகுதிகளில், ஆலமரம் அமைப்பு ஒரு குறுங்காட்டையும் உருவாக்கியுள்ளது எனவும், இதுபோல சுற்றுச்சூழல் சார்ந்த பணிகளில் தி/ள்.ராம்கோ நிறுவனம் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவுக்கு, அவர் நன்றி தெரிவித்தார். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஆலமரம் அமைப்பு செய்த பங்களிப்புகளுக்கான உதாரணமாக, பந்தல்குடியில் 70 ஏக்கரில் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் பூங்காவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்ததைச் சுட்டிக்காட்டினார். மேலும், மாசு இல்லாத ராஜபாளையம் என்ற திட்டத்தில், தி/ள்.ராம்கோ நிறுவனமும் இணைந்து இன்று வரை சிறப்பான பணிகளைச் செய்து வருவதையும் அவர் பாராட்டினார். தொழில் வளர்ச்சியுடன், தி/ள்.ராம்கோ நிறுவனம் போன்ற பெரிய நிறுவனங்கள், ஆலமரம் அமைப்பு போன்ற சுற்றுச்சூழல் சார்ந்த அமைப்புகளுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்

தலைவராக 15 ஆண்டுகள் துவக்கப் பள்ளியில் பணியாற்றிய காலத்திலும், தாம் செய்த முயற்சிகளுக்கு தி/ள்.ராம்கோ நிறுவனம் தொடர்ந்து ஆதரவு அளித்து வந்ததாகவும், கடந்த 18 ஆண்டுகளாக் தொடர்ந்து உதவி வருவதாகவும் அவர் கூறினார். மேலும், இறுதியாக தி/ள்.ராம்கோ நிறுவனம் தங்கள் பகுதியில் கங்கர் குவாரி எடுப்பதில் தமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றும், நிறுவனத்தை வரவேற்கிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

**8.திரு.ஜி. செந்தில்குமார், மறவர்பெருங்குடி கிராமம்**

திரு.ஜி.செந்தில்குமார் அவர்களின் தாயார் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த காலத்தில், அவர் மேற்கொண்ட பணிகளில் தாமும் கலந்து கவனித்ததாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பொதுமக்கள் கருத்து கேட்கும் கூட்டத்தில், மறவர் பெருங்குடி கிராமத்தில் 158.86.5 ஹெக்டேர் பரப்பளவில் நடைபெறவுள்ள சுண்ணாம்புக்கல் கங்கர் குவாரி குத்தகை உரிமம் தொடர்பாக தாம் கருத்து பகிர்வதற்காக வந்திருப்பதாக கூறினார். மேலும், அவரது உரையில், தி/ள்.ராம்கோ சிமெண்ட் நிறுவனம் தங்கள் கிராமத்தில் நீண்டகாலமாக இருந்த குடிநீர் தட்டுப்பாட்டை தீர்க்க "நமக்கு நாமே" என்ற திட்டம் மூலம் 18 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வாட்டர் டேங்க் கட்டுவதற்கு இந்நிறுவனம் 6 லட்சம் ரூபாய் நிதி வழங்கி உதவியதாகவும், மேலும், அவரது தாயார் பதவியில் இருந்த காலத்தில், நிறுவனம் 10 பேரை செக்யூரிட்டி பணிக்கு நியமித்ததையும், பல்வேறு வளர்ச்சி பணிகளில் தொடர்ந்து பங்களித்து வருவதையும் தெரிவித்தார். எனவே, சுண்ணாம்புக்கல் குவாரி குத்தகை உரிமைக்கான அனுமதிக்கு, தங்கள் கிராம மக்கள் சார்பில் எந்தவித தங்குதடையும் இல்லை என்பதையும் கூறினார்.

மேலும், கிராமத்தின் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு போதிய இட வசதி இல்லாததால், அங்கு தி/ள்.ராம்கோ நிறுவனம் மூலம் பொது மருத்துவமனை ஒன்றையும் அமைத்து தருமாறு கேட்டுக்கொண்டார். மேலும், எங்கள் ஊர் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மேம்படுத்த அரசாங்கத்திற்கு மக்கள் பங்களிப்பு தொகையாக 2 லட்சம் ரூபாய் வழங்க வேண்டியிருந்த நிலையில், அந்த நிதியையும் தி/ள்.ராம்கோ நிறுவனம் வழங்க முன்வந்துள்ளதாகவும், மேலும், சேதமடைந்த பெண்கள் சுகாதார நிலையத்தை 5 லட்சம் ரூபாய் மதிப்பில் சீரமைத்துள்ளதாகவும், இதுபோல பல்வேறு திட்டங்களை தங்கள் கிராமத்திற்கு தொடர்ந்து வழங்கி வருவதையும் அவர் பாராட்டி, இறுதியாக குவாரி அமைப்பதற்கான திட்டத்திற்கு தங்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக தெரிவித்தார்.

**9.திரு.எஸ். பழனிச்சாமி பந்தல்குடி**

திரு.எஸ்.பழனிச்சாமி, பந்தல்குடி அரசு மேல்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்கள் மகாத்மா காந்தி கூறிய "இந்தியா கிராமங்களில் வாழ்கிறது" என்ற மேற்கோளை நினைவுபடுத்தி, இன்று கிராமங்கள் தொழிற்சாலைகளால் வாழ்ந்து வருகின்றன என்று குறிப்பிட்டார். இதற்கு பந்தல்குடி கிராமம் ஒரு சிறந்த உதாரணம் என்றும் கூறினார். தி/ள்.ராம்கோ நிறுவனம் 1961ஆம் ஆண்டு தி/ள்.ராம்கோ சிமெண்ட் என்ற பெயரில் தொடங்கப்பட்டது என்றும், அதற்கு முன்னர் அது மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது. இதைத் தொடங்கியவர் மரியாதைக்குரிய ராமசாமி ராஜா அவர் முன்னாள் ராஜாபாளையம் மாநகராட்சித் தலைவராக இருந்தவர். 1950-களில்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான முன்னேற்றத்தின் அவசியத்தை வலியுறுத்தி, அரசு உயர்நிலை அதிகாரிகளும், பொதுமக்களும், உரிமையாளருக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கூறி தனது உரையை முடித்தார்.

**11.திருமதி.முருகலட்சுமி, மறவர்பெருங்குடி, பள்ளி தலைமையாசிரியை**

திருமதி.முருகலட்சுமி அவர்கள், தி/ள்.ராம்கோ நிறுவனம் தனது வளர்ச்சியுடன், தன்னைச் சார்ந்த கிராமங்களின் வாழ்வாதார முன்னேற்றத்திலும் பங்காற்றி வருவதாக கூறி மற்றவர்களின் உரையை அறிந்து, மகிழ்ச்சி அடைந்ததாகவும், பள்ளி வளாகத்தில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி, மாணவர்கள் செல்லுவதற்கு சிரமம் ஏற்பட்ட சமயங்களில், பள்ளி நிர்வாகம் ஒரு அழைப்பு விடுத்தவுடன், நிறுவனம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, கிராவல் மண் கொண்டு, JCB மூலம் நிலத்தை சமப்படுத்தி, நீர்தேக்க பிரச்சினையை சரி செய்ததாக அவர் குறிப்பிட்டார். மேலும், பள்ளிக்கு நோட்டுப்புத்தகங்கள், சிலேடுகள் வழங்குதல், ஆண்டு விழாவில் பரிசுப்பொருட்கள் வழங்குதல், மாணவர்களை ஊக்குவித்தல், பள்ளி வளாக சுற்றுச்சுவரை பழுதுபார்த்து கொடுத்தல் போன்ற பணிகளை இந்த நிறுவனம் தொடர்ந்து செய்து வருவதாகவும், பள்ளி வளாகத்திலும், கிராமத்திலும் கண் பரிசோதனை முகாம், பொது மருத்துவ முகாம் போன்றவற்றை நடத்தி, மருத்துவ உதவிகளை அளித்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், இந்நிறுவனத்தின் சமூக சேவைகள் மேலும் வளர வேண்டும் எனக்கூறி தனது நன்றியையும், வாழ்த்துகளையும் பள்ளியின் சார்பில் தெரிவித்தார்.

**12.திரு.எம்.சந்திரபால்,சேதுராஜபுரம் கிராமம்**

திரு.எம்.சந்திரபால் அவர்கள், இந்நிகழ்ச்சியில் என்னைப்போல் இந்த சிமெண்ட் ஆலையின் நற்செயல்லை பற்றி அனைவரும் குறிப்பிட்டனர் எனவும், தான் படிக்கும் காலத்தில் தான் இந்த நிறுவனம் சிமெண்ட் ஆலைக்காக கல் எடுப்பதற்காக வந்தனர் என்றும், பலரும் தான் சொல்ல நினைத்ததை பகிர்ந்து விட்டதாக கூறினார். மேலும், இத்திட்டம் பதினாறு ஊராட்சியை உள்ளடக்கியது இவ்வூர் பொதுமக்கள் எந்த கோரிக்கையை ராம்கோ நிறுவன தலைமையிடம் எழுப்பினாலும் உடனடியாக அதை செய்து கொடுப்பார்கள் என்றும், இந்நிறுவனம் எவ்வித சண்டையோ சச்சரவிலோ கலந்தது கிடையாது என்றும் எனவே அந்நிறுவனத்திருக்கு இக்கருத்துக்கேட்பு கூட்டம் வாயிலாக தடை இல்லா சான்று தருவதற்கு தமக்கு எந்த எதிர்ப்பும் இல்லை என கூறினார். மேலும், கொப்புச்சித்தம்பட்டி கிராமம் விவசாயத்தை எதிர்நோக்கிய கிராமம் அதன் சுற்றுவட்டாரங்கள் தரிசு நிலமாக உள்ளதால் அதற்கு உதவி நல்குமாறு கோரிக்கை விடுத்தார். குவாரி வேலைகள் முடிந்த நிலத்தில் தேங்கும் நீரால் கால்நடைகள் பாதிப்பிற்கு உள்ளாகிறது எனவே நிலத்தை சமப்படுத்த கோரினார் என்றும், தனது வேலையை குறித்துக்காட்டி நேரமின்மை காரணமாக இந்நிறுவனம் செய்த நல்லுதவிகளை பட்டியலிட நேரம் இல்லை எனவும் குறிப்பிட்டு, இந்த கூட்டத்தின் வாயிலாக, சுரங்கத்திற்கு தடையில்லா சான்று வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து தனது உரையை முடித்தார்.

வரும் தி/ள்.ராம்கோ நிறுவனத்திற்கு, அரசு தடையில்லா சான்றை உடனடியாக வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**16.தி ரு.ஆனந்தகுமார், கொப்புச்சித்தம்பட்டி கிராமம்**

திரு.ஆனந்தகுமார் அவர்கள், கிராமிய திட்டத்தின் மூலம் அவர்களின் ஊரில் 67 கழிப்பறைகள் கட்டி கொடுத்துள்ளதாகவும், கடந்த ஆண்டு மழைக்காலத்தில் கிராமத்தில் தண்ணீர் தேங்கியபோது, தகவல் தெரிவித்தவுடன் பத்து பேருக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உடனடியாக வந்து, அந்த தண்ணீரை நீக்கி உதவி செய்தனர் என்றும், இப்போதைய குவாரி செயல்பாடுகளில், 3 அடி மட்டுமே கல் எடுக்கப்படும்போதும் தண்ணீர் அளவு 10-15m அளவாக இருப்பினும், தற்போது கிராமத்தில் நல்ல தண்ணீர் அளவு மிகவும் குறைவாகவும், உப்புத்தண்ணீர் அதிகமாகவும் இருப்பதாகவும் கூறினார். மேலும், இதனால், தண்ணீர் தேவையை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். மேலும், நிறுவனத்தில் பல ஊர்களிலிருந்து மக்கள் வேலை செய்கிறார்கள் என்றாலும், கொப்புச்சித்தம்பட்டி இருந்து பணிபுரிபவர்கள் குறைவாக உள்ளதாகவும், நிறுவனத்தின் பொறுப்பில் ஊரில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**17.திரு.கோவிந்தராஜ், சிவலார்பட்டி கிராமம்**

திரு.கோவிந்தராஜ் அவர்கள், சிவலார்பட்டி பஞ்சாயத்து, சிவலார்பட்டி, கம்பத்துப்பட்டி, மேலப்பட்டி, சுப்புலாபுரம் ஆகிய நான்கு கிராமங்களுக்கும் தி/ள்.ராம்கோ நிறுவனம் பல்வேறு உதவிகளை செய்து வருவதாகவும், சமீபத்தில், தாங்கள் கேட்ட சிமெண்ட் உலர்தளத்தை நிறுவனம் வழங்கியதோடு, நான்கு கிராமங்களிலும் உள்ள அனைத்து கோயில்களுக்கும் கும்பாபிஷேகத்திற்கு தேவையான பொருட்களை வழங்கியுள்ளதாக கூறினார். மேலும், கண்மாய் முழுவதையும் தூர்வாரி சுத்தம் செய்ததன் மூலம், முன்னர் எவ்வளவு மழை பெய்தாலும் தண்ணீர் வராத இடத்தில், இப்போது சிறிது மழை பெய்தாலும் தண்ணீர் வந்து சேரும் நிலையை ஏற்படுத்தியுள்ளனர் என்றும், இத்தகைய பல உதவிகளை தொடர்ந்து செய்து வரும் தி/ள்.ராம்கோ நிறுவனம், அவர்களின் குடும்ப நிறுவனம் போலவே இணைந்து செயல்பட்டு வருவதாகவும், கிராமங்களுக்கு பெரும் நன்மை செய்து வருவதாகவும், இந்த நிறுவனம் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்.

**18. திரு.ராஜா, தர்மபுரி மாவட்டம்**

திரு.ராஜா, அவர்கள் "பாரதியார் நாகரிக சேவை சங்கம்" என்ற பொது அறிவு தொண்டு நிறுவனத்தில் பணியாற்றி வருபவர் எனவும், இந்த நிகழ்வில் பேசும் வாய்ப்பளித்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் விருதுநகர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, தி/ள்.ராம்கோ சிமெண்ட் நிறுவனம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு மற்றும் பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், இந்த நிறுவனத்திற்கு தடையில்லா சான்றிதழ் வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தொட்டிகளை அமைத்து வழங்கியுள்ளது என்பது மகிழ்ச்சியான விஷயம் என்றும், 80% குடும்பங்களுக்கு கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளன மீதமுள்ள 20% குடும்பங்களுக்கும் கழிவறை வசதி ஏற்படுத்தித் தரும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். மேலும், கிராமத்தில் ஆறு சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு பொது சமுதாய கூடம் இல்லை என்பதால், கிராமத்திலிருந்து இடம் வழங்கத் தயாராக இருப்பதாகவும், அதற்கான கட்டுமான உதவியை நிறுவனத்திடம் கோரினார் என்றும், அதுபோலவே, பொது மயானத்திற்கு ஆழ்துளைக் கிணறு வசதி செய்து, நீர்நிலை ஏற்படுத்தித் தரவும் வேண்டுகோள் விடுத்தார். மேலும், கடைசியாக, நிறுவனத்தின் கல் எடுக்கும் செயல்பாடுகள் கிராமத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் வராத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

**22.திரு.ராஜபாண்டியன், வடக்கு கொப்புச்சித்தம்பட்டி கிராமம்**

திரு.ராஜபாண்டியன் அவர்கள், அரசு அதிகாரிகளுக்கும் தி/ள்.ராம்கோ நிறுவனத்திற்கும் தனது வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்து, இத்திட்டத்தின் முகவரியாக தனது கிராமம் இருப்பது பெருமையென் கூறினார். மேலும், அவரது கூற்றுப்படி, தி/ள்.ராம்கோ நிறுவனம் கிராமத்தில் பல அடிப்படை வசதிகளை ஏற்படுத்தியுள்ளது என்றும், பலர் குறிப்பிட்டது போல் குடிநீர் வசதிகள், கூடுதல் கழிவறை அமைப்புகள் போன்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன எனவும், தற்போது பெரும்பாலான வீடுகளில் கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளன, மேலும் குடிநீர் வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன என்றும், இருப்பினும், சில இடங்களில் குடிநீர் வசதி இன்னும் தேவைப்படுவதாகவும், அதற்கான கோரிக்கைகளை நிறுவனம் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், கடந்த ஆண்டு அதிக மழை பெய்தபோது, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பல வீடுகள் பாதிப்பிலிருந்து காப்பாற்றப்பட்டன எனவும், வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாகவும், அதனை மேலும் விரிவுபடுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். மேலும், முந்தைய கூட்டத்தில் மருத்துவமனைக்கான கோரிக்கையை முன்வைத்திருந்ததை நிறுவனம் நிறைவேற்றியதாகவும், இத்தகைய நல்வினைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் எனவும், இறுதியாக, கிராமத்தில் கங்கர் (kankar) எடுக்கும் பணிக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார்.

**23.திருமதி.சுப்புத்தாய், வடக்கு கொப்புசித்தம்பட்டி கிராமம்**

திருமதி.சுப்புத்தாய் அவர்களின் கிராமத்தில் தி/ள்.ராம்கோ நிறுவனம் பல்வேறு கழிவறை வசதிகள் மற்றும் உதவிகளை வழங்கி, பெண்களுக்கு பல வசதிகளை ஏற்படுத்தியுள்ளது என்றும், சுற்றுச்சூழல் பாதுகாப்பாகவும், மாசு இல்லாமலும், அனைவரும் இவ்வசதிகளை சிறப்பாக பயன்படுத்தி வருகின்றனர் எனவும் கூறினார்.

**24.திரு.முத்துராஜா**

திரு.முத்துராஜா அவர்கள், "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என மகாகவி பாரதி கூறியதை மேற்கோள் காட்டிய அவர், ஒரு நாட்டின் வளர்ச்சியில் இவ்விரு காரணிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன என்று வலியுறுத்தினார். மேலும், வளர்ந்து வரும் நாடான இந்தியாவில், தொழில்துறை பல முன்னேற்றங்களை எட்டிக்கொண்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாகவும், சில சிறிய

உள்ளன என்றும், அவற்றில் குடிநீர் பற்றாக்குறை கடுமையாக உள்ளது எனவும், தெற்குபட்டி, கிழக்குப்பட்டி பகுதிகளில் உப்பு கலந்த நீர் அதிகம் இருப்பதால், சிறுநீரக கற்கள், அதிக வெப்பம் போன்ற பிரச்சனைகள் உருவாகின்றன என்றும், இதனால் குறைந்தபட்சம் நான்கு பகுதிகளிலும் மினரல் வாட்டர் பிளான்ட் அமைக்க வேண்டும் கூறினார். மேலும், மத்திய அரசின் தொழிற்சாலை சட்டப்படி நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை மரநடுகை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குடிநீர், சுகாதாரம், பெண்கள் மேம்பாடு, வாழ்வாதாரம் போன்ற எந்தத் துறையிலும் பயன்படுத்தலாம் என்று தெரிவித்தார். அதன்படி, தனது ஊரான கொப்புசித்தம்பட்டி பகுதியில் மினரல் வாட்டர் பிளான்ட் அமைத்தால் மக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள் எனவும், தி/ள்.ராம்கோ நிறுவனம் ஏற்கனவே 67 கழிப்பறைகள் கட்டித் தந்துள்ளதாகவும், ஆனால், 450-க்கும் மேற்பட்ட ரேஷன் கார்டுகள் உள்ள அந்த பகுதியில் குறைந்தது 400 வீடுகளுக்கும் தனித்தனி கழிப்பறைகள் கட்டித் தர வேண்டும் எனவும், அந்தக் கழிப்பறைகள் தரமுடன், சுமார் ரூபாய் 50,000 முதல் 1 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். மேலும், அப்பகுதியில் விவசாயமே முக்கிய வாழ்வாதாரமாக இருப்பதால், நிறுவனம் பயன்படுத்தாத நிலங்களை விவசாயத்திற்கு அனுமதிக்க வேண்டும் எனவும், வேலை வாய்ப்பு இல்லாததால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் மற்றும் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் போன்ற வாழ்வாதார மேம்பாட்டு உதவிகள் வழங்கினால் நன்மை உண்டாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அவர் படித்த பள்ளியை, முன்னாள் மாணவர்கள் எந்த நிதி உதவியும் இன்றி 1,58,000 ரூபாய் செலவில் புதுப்பித்து, கணினி அறையாக மாற்றி வழங்கியுள்ளனர் என்பதையும் பெருமையாகச் சொன்னார். கொப்புசித்தம்பட்டி மக்கள் தங்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கான சேவை திட்டங்களாக மினரல் வாட்டர் மற்றும் கழிவறைகள் அவசியம் எனவும், கனகதாரா வாகனங்களை இயக்கும் போது கங்கர் சாலையில் கொட்டப்படுவதால், அது நிறுவனத்தின் பெயருக்கு பாதிப்பு உண்டாக்கும் என்றும், நிறுவன ஊழியர்கள் மற்றும் நிர்வாகம் இதை கவனித்து, சுற்றுப்புற மக்களின் மனதை புண்படுத்தாமல், தேவைகளை நிறைவேற்றி, நல்ல பெயரைத் தொடர வேண்டும் என அவர் தெரிவித்தார். மத்திய அரசாங்கத்தின் இன்நலநிதியை நற்செயல்களுக்கு பயன்படுத்தி வரும் தி/ள்.ராம்கோ நிறுவனம் மற்றும் மத்திய அரசாங்கத்திற்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

**27. திரு.சந்திரசேகரன், கொப்புசித்தம்பட்டி கிராமம்**

திரு.சந்திரசேகரன், அவர்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் ஒரு சாதாரண விவசாயியாக தனது அனுபவத்தை பகிர்ந்தார். பெரும்பாலும் தொண்டு நிறுவனங்கள் தான் பேசும் நிலையில், குவாரிக்கு அடுத்த பகுதியில் வாழும் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களை நேரடியாகத் தான் விளக்க முடியும் என்றும், பல வருடங்களாக குவாரி பணிகள் நடைபெற்று வருவதாகவும், நிலத்தில் வேலி கருவேல மரங்கள் அதிகம் உள்ளதாகவும் மேலும், பன்றிகளினால் பாதிப்பு உள்ளதாகவும், வேலி கருவேலையினால் விவசாயம் பாதிப்பதாக குறிப்பிட்டார். மேலும், இதனால், தற்போதுள்ள கருவேலை மரங்கள் முழுவதும் அகற்றி, அதன் இடத்தில் வேப்பமரம், புளியமரம் போன்ற பயனுள்ள மரங்களை நட்டு, நீடித்த நன்மை தரும் வகையில் மாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்தார்.

எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை - 46

இவ்வலுவலகத்தில் தபால் மூலம் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை - 04

அத்துடன் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 19 பக்கங்கள், 218 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).